# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093695

1. District : மாவட்டம் நாகப்பட்டினம் PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு நாகப்பட்டினம் Year: ஆண்டு 2021 FIR No.: மு.த.அ. எண் 01/2021 Date: நாள் 13.01.2021

2. (i) Act சட்டம்: Cr.PC Sections பிரிவுகள்: 102 Cr.P.C. and

(ii) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7, 7-A, 8 & 12 of

(iii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: the PC Act 1988 as amended by the PC (Amendment) Act 2018

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 12.01.2021 Date from : நாள் முதல் Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 16.00 Hrs Time to : நேரம் வரை 23.00 Hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.01.2021 Time : நேரம் 04.00 Hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 13.01.2021 Time : நேரம் 04.00 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக computer typed written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் 2 கி.மீ. கிழக்கு

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகம், நாகப்பட்டினம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் செல்வி.S.பரிமளா (b) Father's/ ~~Husband's~~ Name : தந்தை / கணவர் பெயர் சுப்பிரமணியன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 34/2021 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், தஞ்சாவூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) ① Tmt J. செல்விமலர், BDO(VP), நாகப்பட்டினம், ② Tr D. சந்திரசேகரன், பணிமேற்பார்வையாளர், BDO office, நாகப்பட்டினம், ③ Tr K. சிட்டிபாபு, ஓட்டுநர், BDO office, நாகப்பட்டினம் ④ Tr S. ராஜாகணபதி, ஊராட்சி செயலர், தெத்தி ஊராட்சி ⑤ Tr K. மாரிமுத்து S/o கலியபெருமாள் பெருங்கடம்பனூர் (பெருங்கடம்பனூர் ஊராட்சி மன்ற தலைவியின் கணவர்) ⑥ Tr P. சுப்பிரமணியன் S/o பாலுசாமி, sub-contractor, ஓரத்தூர் ⑦ Tr G. உதயபாஸ்கர், S/o இராஜசேகரன், வடுகை, (வடுகை ஊராட்சி மன்ற தலைவரின் மகன்) ⑧ Tr S. செந்தில்குமார், S/o செல்வகணபதி பொரவாச்சேரி (பொரவாச்சேரி ஊராட்சி மன்ற தலைவரின் செயலர் அனிபராஜாவின் உதவியாளர்)

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

— இல்லை —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்பிக்கப்படுகிறது இன்று 13.01.2021 ஆம் தேதி காலை 04.00 மணிக்கு நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் ஆய்வாளர் க.ரமேஷ் குமார் ஆகிய நான் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது செல்வி.S.பரிமளா, மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள் என்பவர் கொடுத்த புகார் அறிக்கையின்மீது வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு. அனுப்புநர், S.பரிமளா, மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகப்பட்டினம். அய்யா, தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளராகிய என்னால் எனக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின்படி நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் சேர்ந்து 12.01.2021 ஆம் தேதி மாலை 16.00 மணி முதல் 23.00 மணி வரை நாகப்பட்டினம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின்போது நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா நாகப்பட்டினம் வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தில் வெள்ள நிவாரணம் மற்றும் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ள ஊராட்சி கணக்கு எண் 2ல் உள்ள நிதி மற்றும் மத்திய நிதிக்குழு மானியத்தினை கிராம ஊராட்சிகள் பயன்படுத்திக் கொள்ள கடந்த 08.01.2021 ஆம் தேதி நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சிகள்) அவர்களின்

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant.
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 13/1/2021

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

[signature] 13.01.2021

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

13.01.2021

Name: பெயர் G.RAMESH KUMAR
Rank: நிலை ....................No. எண் ..........
Inspector of police,
Vigilance and
Anti-Corruption,
Nagapattinam

**<u>நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.06/2020 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி</u>** :-

செயல்முறை நடவடிக்கைகள் மூலம் நாகப்பட்டினம் வட்டாரத்திலுள்ள 23 ஊராட்சிகளுக்கு கணக்கு 1ல் நிதியின்மை காரணமாக கணக்கு எண் 2லிருந்து கணக்கு எண் 1க்கு தலா ரூபாய் 2 லட்சம் வீதம் நிதிமாற்றம் செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டது மற்றும் பொங்கல் பண்டிகைக்கும் சேர்த்து சம்மந்தப்பட்ட ஊராட்சி அலுவலர்களால் நாகப்பட்டினம் வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி) அவர்களுக்கு கையூட்டாக கொடுக்க வைத்திருந்த மற்றும் கொடுத்த கணக்கில் வராத பணம் சரியான முகாந்திரம் கூறாததால், குற்றமுறு நடவடிக்கைக்காக மகஜரில் கண்டவாறு உள்ள மொத்த பணம் ரூபாய் 1,64,500/- இருந்தது திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி திடீர் சோதனையின்போது 1)திருமதி.J. செபஸ்தியம்மாள், வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), வட்டார வளர்ச்சி அலுவலகம், நாகப்பட்டினம் என்பவரிடமிருந்து ரூபாய் 40,500/-, 2)திரு.D.சந்திரசேகரன், பதிவுறு எழுத்தர், வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ.) அலுவலகம், நாகப்பட்டினம் என்பவரிடமிருந்து ரூபாய் 11,000/-, 3)திரு.K.சிட்டிபாபு, ஓட்டுநர், வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.) அலுவலகம், நாகப்பட்டினம் என்பவரிடமிருந்து ரூபாய் 5,000/-, 4)திரு.S.ராஜா கருணாநிதி, ஊராட்சி செயலர், தெத்தி ஊராட்சி, No.94, தெற்கு தெரு, தெத்தி, நாகப்பட்டினம் என்பவரிடமிருந்து ரூபாய் 11,000/-, 5)திரு.K.மாரிமுத்து, த/பெ.கலியபெருமாள், மேலவெளி, பெருங்கடம்பனூர் (பெருங்கடம்பனூர் ஊராட்சிமன்றத் தலைவர் திருமதி.தீபா என்பவரின் கணவர்) என்பவரிடமிருந்து ரூபாய் 57,000/-, 6)திரு.P.சுப்பிரமணியன், த/பெ.பாப்புசாமி, No.1-71, வாணியன் கொல்லை தெரு, ஒரத்தூர்(Sub-Contractor) என்பவரிடமிருந்து ரூபாய் 10,000/-, 7)திரு.G.உதயபிரகாஷ், த/பெ.குணசேகரன், 167, தோப்புத்தெரு, வடகுடி(வடகுடி ஊராட்சிமன்றத்தலைவர் திருமதி. செம்மலர் அவர்களின் மகன்) என்பவரிடமிருந்து 10,000/-, 8)திரு.S.செந்தில்குமார், த/பெ.செல்வகணபதி, No.5/121, பெருமாள் மேலமடவிளாகம், பொரவாச்சேரி (பொரவாச்சேரி ஊராட்சிமன்ற செயலர் திரு.அன்புராஜா என்பவரின் உதவியாளர்) என்பவரின் உதவியாளர் செந்தில்குமார் என்பவரிடமிருந்து ரூபாய் 20,000/- ஆகியவை குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக பெற்று வைத்திருந்த மற்றும் கொடுக்க வைத்திருந்த பணம் என்பதன் அடிப்படையில் மகஜரில் கண்டவாறு உள்ள மொத்த பணம் ரூபாய் 1,64,500/-, பணம் வைத்திருந்த 6 கவர்கள் மற்றும் நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய அலுவலக பணியாளர்கள் வருகை பதிவேடு 2021, நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.) அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் ந.க.எண்.1647/2019/ஆ1, நாள் 08.01.2021-ன் அசல் ஆகியவை திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜரில் கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனையின் போது மகஜரில் கண்டபடி கைப்பற்றப்பட்ட பணம் ரூபாய் 1,64,500/-, ஆவணங்கள் மற்றும் 1)திருமதி.J.செபஸ்தியம்மாள், வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), 2)திரு.D.சந்திரசேகரன், பதிவுறு எழுத்தர், வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ.) அலுவலகம், நாகப்பட்டினம், 3)திரு.K.மாரிமுத்து, த/பெ.கலியபெருமாள், மேலவெளி, பெருங்கடம்பனூர்

(பெருங்கடம்பனூர் ஊராட்சிமன்றத்தலைவர் திருமதி.தீபா என்பவரின் கணவர்) என்பவர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஆஜர் படுத்துகிறேன். எனவே மேற்படி 1)திருமதி.J.செபஸ்தியம்மாள், வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), வட்டார வளர்ச்சி அலுவலகம், நாகப்பட்டினம், 2)திரு.D.சந்திரசேகரன், பதிவுறு எழுத்தர், வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ.) அலுவலகம், நாகப்பட்டினம், 3)திரு.K.சிட்டிபாபு, ஓட்டுநர், வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.) அலுவலகம், நாகப்பட்டினம், 4)திரு.S.ராஜா கருணாநிதி, ஊராட்சி செயலர், தெத்தி ஊராட்சி, No.94, தெற்கு தெரு, தெத்தி, நாகப்பட்டினம், 5)திரு.K.மாரிமுத்து, த/பெ.கலியபெருமாள், மேலவெளி, பெருங்கடம்பனூர் (பெருங்கடம்பனூர் ஊராட்சிமன்றத்தலைவர் திருமதி.தீபா என்பவரின் கணவர்), 6)திரு.P.சுப்பிரமணியன், த/பெ.பாப்புசாமி, No.1-71, வாணியன் கொல்லை தெரு, ஒரத்தூர்(Sub-Contractor), 7)திரு.G.உதயபிரகாஷ், த/பெ.குணசேகரன், 167, தோப்புத்தெரு, வடகுடி(வடகுடி ஊராட்சிமன்றத்தலைவர் திருமதி.செம்மலர் அவர்களின் மகன்) மற்றும் 8)திரு.S.செந்தில்குமார், த/பெ.செல்வகணபதி, No.5/121, பெருமாள் மேலமடவிளாகம், பொரவாச்சேரி (பொரவாச்சேரி ஊராட்சிமன்ற செயலர் திரு.அன்புராஜா என்பவரின் உதவியாளர்) என்பவர்களின்மீது உரிய சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (ஒப்பம்) சு.பரிமளா13/1/2021 (S.பரிமளா) மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள். திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள். இன்று 12.01.2021 ஆம் தேதி மாலை சுமார் 16.00 மணிமுதல் நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா நாகப்பட்டினம் வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தை செல்வி.S.பரிமளா, த/பெ.சுப்பிரமணியன், மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், தஞ்சாவூர் அவர்கள் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.G.ரமேஷ் குமார் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்கள் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் ஆய்வின் செயல்முறை நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆய்வுகுழு ஆய்வாளர் செல்வி.S.பரிமளா அவர்களால் தயார் செய்யப்படும் திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் மகஜர் விபரம் பின்வருமாறு. நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா நாகப்பட்டினம் வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தில் வெள்ள நிவாரணம் மற்றும் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ள ஊராட்சி கணக்கு எண் 2ல் உள்ள நிதி மற்றும் மத்திய நிதிக்குழு மானியத்தினை கிராம ஊராட்சிகள் பயன்படுத்திக் கொள்ள கடந்த 08.01.2021 ஆம் தேதி நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சிகள்) அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் மூலம் நாகப்பட்டினம் வட்டாரத்திலுள்ள 23 ஊராட்சிகளுக்கு கணக்கு 1ல் நிதியின்மை காரணமாக கணக்கு எண் 2லிருந்து கணக்கு எண் 1க்கு தலா ரூபாய் 2 லட்சம் வீதம் நிதிமாற்றம் செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டது மற்றும் பொங்கல் பண்டிகைக்கும் சேர்த்து சம்மந்தப்பட்ட ஊராட்சி அலுவலர்களால் நாகப்பட்டினம் வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி) அவர்களுக்கு கையூட்டு வழங்குவதாக நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசியதகவல்களினை இன்று 12.01.2021 ஆம் தேதி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்,

தஞ்சாவூர் அவர்களுக்கு தெரிவித்ததன் அடிப்படையில், மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் அவர்கள் இன்று 12.01.2021 ஆம் தேதி நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு சுமார் 15.00 மணிக்கு வந்தும், நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து 12.01.2021 ஆம் தேதி சுமார் 15.45 மணிக்கு இரண்டு அரசு வாகனத்தில் புறப்பட்டு நாகப்பட்டினம் வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு சுமார் 16.00 மணிக்கு வந்து, மேற்படி நாகப்பட்டினம் விஜிலென்ஸ் குழுவினர் சகிதம் நாகப்பட்டினம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விபரம் பின்வருமாறு. மேற்படி நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகமானது நாகப்பட்டினம் மாவட்டம் நாகப்பட்டினம் தாலுக்கா நாகப்பட்டினம் சுற்றுலா மாளிகை கட்டிடதிற்கு தெற்கே நாகை புதிய கடற்கரை சாலை செல்லும் ரோட்டிற்கு மேற்கே நாகப்பட்டினம் வட்டார வளர்ச்சி அலுவலக கட்டிடம் கிழக்கு பார்த்த வாயிலுடன்கூடிய இரண்டு தளங்களுடன் அமைந்துள்ளது. மேற்படி தரைதளத்தில் நுழைவு வாயிலுக்கு இடதுபுறம் முதல் தளத்திற்கு செல்லும் மாடிபடிகளும், அதனை அடுத்து தெற்கு பக்கம் வட்டார வளர்ச்சி அலுவலர்(வட்டார ஊராட்சி) அறையும், அதனை அடுத்து மேற்கு பக்கம் வட்டார வளர்ச்சி அலுவலர்(வட்டார ஊராட்சி) அலுவலக அறையும் உள்ளது. அதனை அடுத்து கழிவறையும், அலுவலகப்பிரிவுக்கு எதிர்புறம் கணினி அறையும் உள்ளது. அலுவலகத்தின் வடக்கு பக்கம் ஒன்றிய தலைவர் அறையும் உள்ளது. முதல் தளத்தில் தெற்கு பக்கம் வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி) அவர்களின் அறையும் அதனை அடுத்து அலுவலக அறையும், அதனை அடுத்து கழிவறையும், அதற்கு வடக்கு பக்கம் ஒன்றிய பணிமேற்பார்வையாளர் அறையும், உதவி பொறியாளர் அறையும், சாலை ஆய்வாளர் அறையும் மற்றும் அலுவலர்கள் அறைக்கு எதிர்புறம் கூட்ட அரங்கும் உள்ளது. நாகப்பட்டினம் வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு எதிரே நாகப்பட்டினம் புதிய கடற்கரை செல்லும் வடக்கு தெற்காக செல்லும் சாலையும், சாலைக்கு அடுத்து BDO அலுவலகத்திற்கு எதிர்புறம் காஸ்மோ பாலிடன் கிளப்பும், BDO அலுவலகத்திற்கு வடக்குபக்கம் சுற்றுலா மாளிகை கட்டிடமும் உள்ளது. மேற்படி BDO அலுவலக வளாகத்தின் வடக்கு பக்கம் சிமெண்ட் கிடங்கும், BDO அலுவலக வளாகத்தின் தெற்கு பக்கம் EVM Box வைக்கும் அறையும் உள்ளது. நாகப்பட்டினம் BDO(BP) அறையில் திரு.K.செந்தில், வட்டார வளர்ச்சி அலுவலர்(வட்டார பஞ்சாயத்து) என்பவரும், நாகப்பட்டினம் BDO(VP) அறையில் திருமதி.J.செபஸ்தியம்மாள், வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி) என்பவரும் பணியில் இருந்தனர். வட்டார வளர்ச்சி அலுவலர்(வட்டார ஊராட்சி) அலுவலக அறை மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி) அலுவலக அறையில் அலுவலர்கள் மற்றும் நாகப்பட்டினம் வட்டார ஊராட்சிகளை சேர்ந்த நபர்கள், மற்றும் ஒப்பந்தக்காரர்கள் இருந்தனர். மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குழுவினர் அங்கிருந்தவர்கள் அனைவரிடமும் தங்களையும், தங்களுடன் வந்தவர்களையும் அறிமுகம் செய்தபோது, மேற்படி இடத்தில் நின்று கொண்டிருந்த சில நபர்கள் அவரவர்கள் நின்றுகொண்டிருந்த இடத்தை விட்டு நழுவ முயற்சித்தார்கள். மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் அங்கிருந்தவர்களை நிறுத்தி விஜிலென்ஸ் குழுவினரின் உதவியுடன்

அவர்களை தனித்தனியாக விசாரித்தும் விஜிலென்ஸ் குழுவினரின் உதவியுடன் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி சோதனையில் கீழ்கண்ட நபர்கள் வைத்திருந்து ஆஜர் செய்த தொகைகள் சரியான முகாந்திரம் கூறிய தொகை எனத்தெரிய வந்ததால் அந்தத் தொகை சம்மந்தப்பட்ட நபர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது, சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடியதாக தெரியவந்த கையூட்டு தொகையானது வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலக அலுவலர்களுக்கு கையூட்டு கொடுப்பதற்காக வைக்கப்பட்டிருந்த பணமாக இருக்கலாம் என்பதன் அடிப்படையிலும், நாகப்பட்டினம் வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தில் வெள்ள நிவாரணம் மற்றும் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ள ஊராட்சி கணக்கு எண் 2ல் உள்ள நிதி மற்றும் மத்திய நிதிக்குழு மானியத்தினை ஊராட்சிகள் பயன்படுத்தி கொள்ள 08.01.2021 ஆம் தேதி நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சிகள்) அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் மூலம் நாகப்பட்டினம் வட்டாரத்திலுள்ள 23 ஊராட்சிகளுக்கு கணக்கு எண் 1ல் நிதியின்மை காரணமாக கணக்கு எண்2லிருந்து கணக்கு எண் 1க்கு தலா ரூபாய் 2 லட்சம் வீதம் நிதிமாற்றம் செய்யப்பட்டு ஆணையிடபட்டதற்கும், பொங்கல் பண்டிகைக்கும் சேர்த்து சம்மந்தப்பட்ட ஊராட்சி அலுவலர்களால் நாகப்பட்டினம் வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி) அவர்களுக்கு கையூட்டு வழங்குவதற்காக வைத்திருந்த மற்றும் கொடுத்த கையூட்டு பணம் என்பதன் அடிப்படையில் கீழ்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் ரூபாய்.1,64,500/-ம் திடீர் ஆய்வின் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பெயர், பதவிமற்றும் முகவரி | திரும்ப ஒப்படைக்கப்பட்ட ரூபாய் | கைப்பற்றப்பட்டரூபாய் |
|---|---|---|---|
| 1 | திருமதி.J.செபஸ்தியம்மாள், வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.), நாகப்பட்டினம் | 650 | 40,500 |
| 2 | திரு.D.சந்திரசேகரன், பதிவுறு எழுத்தர், வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ.) அலுவலகம், நாகை | 170 | 11,000 |
| 3 | திரு.K.சிட்டிபாபு, ஓட்டுநர், வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.) அலுவலகம், நாகப்பட்டினம் | 190 | 5,000 |
| 4 | திரு.S.ராஜா கருணாநிதி, ஊராட்சி செயலர், தெத்தி ஊராட்சி, No.94, தெற்கு தெரு, தெத்தி, நாகப்பட்டினம் | 520 | 11,000 |
| 5 | திரு.K.மாரிமுத்து, த/பெ.கலியபெருமாள், மேலவெளி, பெருங்கடம்பனூர் (பெருங்கடம்பனூர் ஊராட்சிமன்றத்தலைவர் திருமதி.தீபா என்பவரின் கணவர்) | 860 | 57,000 |
| 6 | திரு.P.சுப்பிரமணியன், த/பெ.பாப்புசாமி, No.1-71, வாணியன் கொல்லை தெரு, ஓரத்தூர்(Sub-Contractor) | 850 | 10,000 |

| | | | |
|---|---|---|---|
| 7 | திரு.G.உதயபிரகாஷ், த/பெ.குணசேகரன், 167, தோப்புத்தெரு, வடகுடி(வடகுடி ஊராட்சிமன்றத் தலைவர் திருமதி.செம்மலர் அவர்களின் மகன்) | 1650 | 10,000 |
| 8 | திரு.S.செந்தில்குமார், த/பெ.செல்வகணபதி, பெருமாள் மேலமடவிளாகம், பொரவாச்சேரி (பொரவாச்சேரி ஊராட்சிமன்ற செயலர் அன்புராஜா என்பவரின் உதவியாளர்) | 150 | 20,000 |
| 9 | சாந்தி, தட்டச்சர் | 2,850 | - |
| 10 | பழனியப்பன், அலுவலக உதவியாளர் | 620 | - |
| 11 | மீனாட்சி, கணக்கர் | 1,290 | - |
| 12 | பிரவீனா, சாலை ஆய்வாளர் | 5,100 | - |
| 13 | சுமதி, அலுவலக உதவியாளர் | 450 | - |
| 14 | ஜலீல், உதவி பொறியாளர் | 740 | - |
| 15 | வைஜெயந்திமாலா, கணினி ஆப்ரேட்டர் | 1,200 | - |
| 16 | சிவசங்கரி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 1,150 | - |
| 17 | மீனா, இளநிலை உதவியாளர் | 1,410 | - |
| 18 | குமார், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 2,280 | - |
| 19 | கௌசல்யா, ஊராட்சி செயலர் | 1,200 | - |
| 20 | பூரணி, கணினி ஆப்ரேட்டர் | 5,320 | - |
| 21 | பரிமளா, கிராம சேவிகா | 830 | - |
| 22 | திருமுருகன், கணினி ஆப்ரேட்டர் | 780 | - |
| 23 | ஜெயக்குமார், பணிமேற்பார்வையாளர் | 120 | - |
| 24 | சங்கர், இளநிலை உதவியாளர் | 590 | - |
| 25 | மதியரசி, இ-சேவை மையம் | 9,060 | - |
| 26 | கணேசன், பணிமேற்பார்வையாளர் | 7,920 | - |
| 27 | சின்னசாமி, இளநிலை உதவியாளர் | 470 | - |
| 28 | செந்தில், வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ) | 900 | - |
| 29 | அருமைநாதன், உதவி பொறியாளர் | 3,010 | - |
| 30 | கோபாலகிருஷ்ணன், ஊராட்சி செயலர் | 1,000 | - |
| 31 | அன்பழகன், பணிமேற்பார்வையாளர் | 3,550 | - |
| 32 | லாரன்ஸ், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 3,120 | - |
| 33 | பழனிச்சாமி, ஆய்வாளர், LFA | 290 | - |
| 34 | தீபா, கணினி ஆப்ரேட்டர் | 260 | - |
| | **மொத்தம்** | **60,550** | **1,64,500** |

திடீர் சோதனையின்போது திருமதி.J.செபஸ்தியம்மாள், வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.), நாகப்பட்டினம் என்பவர் அவரது ஹேண்ட் பேக்கிலிருந்து ரூபாய் 41,150/- யை எடுத்து ஆஜர் செய்தார். அவர் சரியான முகாந்திரம் கூறிய சொந்தப்பணம் ரூபாய் 650/- திருமதி.J.செபஸ்தியம்மாள், வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.) அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டு, சரியான முகாந்திரம் கூறாததால், குற்றமுறு நடவடிக்கையின் மூலம்

கையூட்டாக கேட்டு பெற்ற பணம் என்பதன் அடிப்படையில் ரூபாய் 40,500/- மட்டும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. திரு.K.மாரிமுத்து, த/பெ.கலியபெருமாள், மேலவெளி, பெருங்கடம்பனூார் (பெருங்கடம்பனூார் ஊராட்சிமன்றத்தலைவர் திருமதி.தீபா என்பவரின் கணவர்) என்பவர் அவரது அண்ட்ராயர் பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்தில், ரூபாய் 51,360 தனியாகவும், 1)வெள்ளைநிற கவரில் "பொங்கல் வாழ்த்துக்கள் I 1000/-" என எழுதப்பட்ட கவரில் ரூபாய் 1000/- இருந்தது, 2)வெள்ளைநிற கவரில் "பொங்கல் வாழ்த்துக்கள் II 1000/-" என எழுதப்பட்ட கவரில் ரூபாய் 1000/- இருந்தது, 3)வெள்ளைநிற கவரில் "பொங்கல் வாழ்த்துக்கள் III 1000/-" என எழுதப்பட்ட கவரில் ரூபாய் 1000/- இருந்தது, 4)வெள்ளைநிற கவரில் "பொங்கல் வாழ்த்துக்கள் IX" என எழுதப்பட்ட கவரில் ரூபாய் 1000/- இருந்தது மற்றும் 5)வெள்ளைநிற கவரில் "பொங்கல் வாழ்த்துக்கள் தலைவர் 2500/-" என எழுதப்பட்ட கவரில் ரூபாய் 2,500/- இருந்தது. ஆக மொத்தம் ரூபாய் 57,860/- இருந்தது. அவர் சரியான முகாந்திரம் கூறிய சொந்தப்பணம் ரூபாய் 860/- திரு.K.மாரிமுத்து அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மீதமுள்ள ரூபாய் 57,000/- வட்டார வளர்ச்சி அலுவலர் கிராம ஊராட்சி செபஸ்தியம்மாள் அவர்கள் 8.1.2021 ஆம் தேதி ஊராட்சி 2 வது கணக்கிலிருந்து 1 வது கணக்கிற்கு 2 லட்சம் நிதிமாற்றம் செய்ததற்கும், வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு பொங்கலுக்கு பரிசாக கொடுப்பதற்காக தனது மனைவி திருமதி.தீபா ஊராட்சி மன்றதலைவி கொடுத்தனுப்பியதன் பேரில் வைத்திருப்பதாக கூறியதன் அடிப்படையில், மேற்கண்ட கவர் மற்றும் தனியாக வைத்திருந்த பணம் BDO அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணம் என்பதால் மேற்கண்ட பணம் ரூபாய் 57,000/- மற்றும் மேற்கண்ட விபரப்படியான 5 கவர்கள் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. திரு.G.உதயபிரகாஷ், த/பெ.குணசேகரன், 167, தோப்புத்தெரு, வடகுடி(வடகுடி ஊராட்சிமன்றத்தலைவர் திருமதி.செம்மலர் அவர்களின் மகன்)என்பவர் அவரது சட்டை பாக்கெட்டிலிருந்து ரூபாய் 11,650/-யை எடுத்து ஆஜர் செய்தார். அவர் சரியான முகாந்திரம் கூறிய சொந்தப்பணம் ரூபாய் 1,650/- திரு.G.உதயபிரகாஷ் அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மீதமுள்ள ரூபாய் 10,000/- வட்டார வளர்ச்சி அலுவலர் கிராம ஊராட்சி செபஸ்தியம்மாள் அவர்கள் 8.1.2021 ஆம் தேதி ஊராட்சி 2 வது கணக்கிலிருந்து 1 வது கணக்கிற்கு 2 லட்சம் நிதிமாற்றம் செய்ததற்கும், வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு பொங்கலுக்கு பரிசாக கொடுப்பதற்காக வடகுடி ஊராட்சிமன்ற தலைவராகிய தனது தயார் திருமதி.செம்மலர் கொடுத்தனுப்பியதன் பேரில் வைத்திருப்பதாக கூறியதன் அடிப்படையில், மேற்படி பணம் BDO அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணம் என்பதால் மேற்கண்ட பணம் ரூபாய் 10,000/- கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. திரு.S.செந்தில்குமார், த/பெ.செல்வகணபதி, No.5/121, பெருமாள் மேலமடவிளாகம், பொரவாச்சேரி (பொரவாச்சேரி ஊராட்சிமன்ற செயலர் திரு.அன்புராஜா என்பவரின் உதவியாளர்) என்பவர் அவரது அண்ட்ராயர் பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்தில், ரூபாய் 10,250 தனியாகவும், பச்சை மற்றும் பல கலர் கலந்த வாழ்க வளமுடன் என்று அச்சடிக்கப்பட்ட மொய் கவரில் "BDO 10,000" என எழுதப்பட்ட கவரில் ரூபாய் 10,000/- இருந்தது.

ஆக மொத்தம் ரூபாய் 20,250/- இருந்தது. அவர் சரியான முகாந்திரம் கூறிய சொந்தப்பணம் ரூபாய் 250/- திரு.S.செந்தில்குமார் அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மீதமுள்ள ரூபாய் 20,000/- வட்டார வளர்ச்சி அலுவலர் கிராம ஊராட்சி செபஸ்தியம்மாள் அவர்கள் 8.1.2021 ஆம் தேதி ஊராட்சி 2 வது கணக்கிலிருந்து 1 வது கணக்கிற்கு 2 லட்சம் நிதிமாற்றம் செய்ததற்கும், வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு பொங்கலுக்கு பரிசாக கொடுப்பதற்காக பொரவாச்சேரி ஊராட்சிமன்ற தலைவர் கொடுத்தனுப்பியதன் பேரில் வைத்திருப்பதாக கூறியதன் அடிப்படையில், மேற்கண்ட கவர் மற்றும் தனியாக வைத்திருந்த பணம் BDO அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணம் என்பதால் மேற்கண்ட பணம் ரூபாய் 20,000/- மற்றும் மேற்கண்ட விபரப்படியான ஒரு கவர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்ற பணம் மற்றும் கையூட்டாக கொடுப்பதற்காக வைத்திருக்கலாம் என்பதன் அடிப்படையில் மேற்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் ரூபாய்.1,64,500/-, மேற்கண்ட விபரப்படியான 6 கவர்கள், மற்றும் நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய அலுவலக பணியாளர்கள் வருகை பதிவேடு **2021** மற்றும் நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.) அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் ந.க.எண்.**1647/2019/ஆ1**, நாள் **08.01.2021**-ன் அசல் ஆகியவை இந்த திடீர் ஆய்வின் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் ஆய்வின்போது மாவட்ட ஆய்வுகுழு ஆய்வாளர் அவர்கள் 1)திருமதி.J.செபஸ்தியம்மாள், வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.), நாகப்பட்டினம் 2)திரு.D.சந்திரசேகரன், பதிவுறு எழுத்தர், வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ.) அலுவலகம், நாகப்பட்டினம் மற்றும் 3)திரு.K.மாரிமுத்து, த/பெ.கலியபெருமாள், மேலவெளி, பெருங்கடம்பனூர் (பெருங்கடம்பனூர் ஊராட்சிமன்றத்தலைவர் திருமதி.தீபா என்பவரின் கணவர்) ஆகியோரை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பெறப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறைகள் இன்று 12.01.2021 ஆம் தேதி இரவு 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகளின் ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பம் இடப்பட்டுள்ளது. **பணிந்து சமர்பிக்கப்படுகிறது.** இன்று 13.01.2021 ஆம் தேதி காலை 04.00 மணிக்கு மேற்படி புகாரைப்பெற்று நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குற்ற எண்.01/2021, U/s. 102 Cr.P.C and Sections 7, 7-A, 8 and 12 of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption(Amendment) Act 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

(G.RAMESH KUMAR) 13.01.2021
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் அறிக்கை, திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள், எதிரிகள் 1)திருமதி.J.செபஸ்தியம்மாள்,

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.), நாகப்பட்டினம் 2)திரு.D.சந்திரசேகரன், பதிவுறு எழுத்தர், வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ.) அலுவலகம், நாகப்பட்டினம் மற்றும் 3)திரு.K.மாரிமுத்து, த/பெ.கலியபெருமாள், மேலவெளி, பெருங்கடம்பனூர் (பெருங்கடம்பனூர் ஊராட்சிமன்றத்தலைவர் திருமதி.தீபா என்பவரின் கணவர்) நாகப்பட்டினம் மாவட்டம் என்பவர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, நாகப்பட்டினம் அவர்களுக்கு பணிந்து சமர்பித்தும், இதர நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

(G.RAMESH KUMAR), 13.01.2021
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்